**கொடுக்கப்பட்டுள்ள செய்தித்தாள் செய்தியை நன்கு படித்துக் கீழே வழங்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

# பள்ளி மாணவர்களுக்கு மரக்கன்று விநியோகம்

## நட்டு வளர்த்து செல்பி படம் அனுப்பினால் பரிசு

**கோவை, ஆக. 31:** பள்ளிக்கல்வித்துறை சார்பில் கோவை ஒத்தக்கால்மண்டபம் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் 2 ஆயிரம்பேருக்கு மரக்கன்றுகள் நேற்று அளிக்கப்பட்டது.

பள்ளிக்கல்வித்துறை சார்பில் மாணவர்களிடம் மரம் வளர்க்கும் ஆர்வத்தை தூண்டும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனை மாவட்ட அளவில் செயல்படும் சுற்றுசூழல் மன்றம் செயல்படுத்தி வருகிறது. அதன்படி, கோவை மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு பள்ளி மாணவ, மாணவிகளுக்கும் மரக்கன்றுகள் வழங்கி சுற்றுசூழல் குறித்த விழிப்புணர்வையும், மரக்கன்று வளர்க்கும் ஆர்வத்தையும் மாணவர்கள் இடையில் ஏற்படுத்த பள்ளிக்கல்வித்துறை திட்டமிட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக, கோவை ஒத்தக்கால் மண்டபம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் 2 ஆயிரம் பேருக்கு மரக்கன்று வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடந்தது. இதில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அய்யண்ணன், மாவட்ட கல்வி அலுவலர்கள் கீதா, வெள்ளிங்கிரி, பள்ளி தலைமை ஆசிரியர் ரமேஷ் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

இது குறித்து மாவட்ட சுற்றுசூழல் மன்றம் ஒருங்கிணைப்பாளர் லோகாம்பாள் கூறியதாவது: மாணவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மரக்கன்றுகளை பள்ளி, வீடுகளில் நட்டு வைக்க வேண்டும்.

மேலும், அதனை புகைப்படம் எடுத்து 'என் இயற்கை, என் செல்பி' என்ற மொபைல் ஆப்பில் பதிவு செய்ய வேண்டும். இப்படி, பதிவு செய்யும் முதல் நூறு மாணவர்களுக்கு பரிசு வழங்கப்படும். மாணவர்கள் மரக்கன்றுகளை வளர்க்க ஊக்குவிக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பூச்செடி, பழச்செடி, மூலிகை செடி என மூன்று வகையான செடிகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் மரக்கன்றுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.



கோவை மாவட்ட பள்ளி கல்வித்துறை சுற்றுச்சூழல் மன்றம் சார்பில் ஒத்தக்கால்மண்டபம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவ,மாணவிகளுக்கு நேற்று இலவசமாக மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.

1. *மொத்தம் எத்தனை மரக்கன்றுகள் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்டன ?*

   ________________

2. *எந்த மொபைல் ஆப்பில் மாணவர்கள் தங்கள் புகைப்படங்களைப் பதிவு செய்ய வேண்டும் ?* ________________________________________

3. *மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மூன்று செடி வகைகள் யாவை ?*

   ______________________________________________________________

4. *மாணவர்களுக்கு மரக்கன்றுகளை வழங்கும் நோக்கம் என்ன ?*

   ______________________________________________________________

   ______________________________________________________________

5. *மரம் வளர்ப்பதால் ஏற்படும் நன்மைகள் யாவை ?*

   ______________________________________________________________

   ______________________________________________________________